# பண்பும் பெருமிதமும்

உற்சாகமும் குதூகலமும் இளமையும் நிறைந்திருந்த அந்த இடத்திலே அழகு கொலுவீற்றிருந்தது. போட்டி மனப்பான்மையுடன் வந்த மன்மதனும் ரதியும் அந்த அழகு கண்டு பின் வாங்கினார்கள். பிறகு எட்டிப் பார்த்து அஞ்சலி செய்தார்கள். அங்கிருந்து செல்ல மனமின்றி தங்கள் கருத்தை சிறிது நேரம் அங்கேயே நாட்டிவிட்டனர்!

அந்த இடம் ஒரு கல்லூரியின் அழகிய பகுதி. அங்கே ஒரு சிறு தேநீர் விருந்து.

அகிலாவைப் போன்ற உற்சாகிகளும் ராதையைப் போன்ற பெண்ணழகிகளும் ராமனாதனைப் போன்ற வாலிப மாணவர்களும் குழுமியிருந்தனர். பெரும்பாலான மாணவ உற்சாகிகளான சில மாணவ மாணவிகள் சிற்றுண்டி பரிமாற பலரும் பலவிதப் பேச்சுப் பேசியவாறு மகிழ்ந்திருக்க தேனீர் விருந்து இயங்கிக்கொண்டிருந்தது.

சில கோப்பைகளை ஒரு 'டிரே'யில் தாங்கிய வண்ணம் புன்முறுவல் மலர்ந்தவளாய் காட்சியளித்து வந்த அகிலாவை ராதை வியப்புடன் கவனித்தாள். அகிலாவின் கலகலப்பும் சுறுசுறுப்பும் கண்டு பிரமிக்கும் ராதை அகிலாவின் நெருங்கிய தோழிதான். எனினும் இருவரின் இயல்புகளும் மாறுபட்டவை. அகிலா ராதையைவிட அழகில் சிறந்தவள் அல்ல. இருவருள் ராதைதான் அழகு. ஆனால் மாணவ மாணவிகள் அகிலாவை அதிகம் கவனிப்பதும் மதிப்பதும் எதனால்? அகிலா கூச்சமும் தயக்கமும் இன்றி கேளிக்கையாகப் பழகுவாள் - பிறரைக் கவர்ந்துவிடும் கவர்ச்சியைப் பெற்றிருந்தாள். கல்லூரியை ஒட்டிய பொது அலுவல்களிலே பங்குகொள்ள முன்னணியிலே நிற்பாள், சிலபேர் அகிலாவின் நடவடிக்கைகளைப் பழிப்பதும் உண்டு - ஏளனம் செய்வதும் உண்டு.

அகிலா அவற்றை பொருட் செய்யமாட்டாள்! 'பிறர் பொறாமைப்படும்படியாக நான் இருக்கிறேனாக்கும்! அப்பொழுது அது நான் பெருமைப்பட வேண்டியதுதான்!' என்று எண்ணுபவளாக விளங்குவாள் அவள்.

ஆனால் ராதை ரொம்ப சங்கோசி. சற்று முன்பு கூட அகிலா "வருகிறாயா, 'செர்வ்' பண்ணலாம்!" என்று அழைத்தாள். ராதை மறுத்துவிட்டாள். "எனக்கு பயமாயிருக்குடி அகிலா! எங்கானும் தட்டுகளையும் கப்புகளையும் கீழே போட்டு வைப்பேன், பயத்திலே!' என்று சொல்லிவிட்டாள். ஒரு உதவியும் செய்யாமல் சிற்றுண்டி கொள்ளவும் வெட்கம் பிடுங்கித் தின்றது அவளை! ராதையின் பக்கம் அடிக்கடி பார்வையைச் செலுத்திய ராமனாதனின் முகத்தில் தவழும் புன்னகை ராதைக்கு வேதனையை வளர்த்திவிட்டது. அகிலாவின் சுறுசுறுப்புக்கு ஏற்றாப்போல் அவனும் பரபரப்பாக வளைய வந்துகொண்டிருந்தான் அல்லவா?

என்ன தோன்றிற்றோ ராமநாதனுக்கு! "அகிலா! உன் தோழி நீ இல்லாமல் சாப்பிட மாட்டாள் போலிருக்கு. போ, நீ சாப்பிடு!" என்று கூறி கண்களாலே ராதையைக் காட்டினான்.

'ஆகட்டும் பேஷாகப் போகிறேன். உனக்கு அவள் சாப்பிடாதது உறுத்துகிறதா, நான் சாப்பிடாததுதான் பொறுக்கவில்லையோ தெரியவில்லை' என மனதுள் விஷமமாகச் சிரித்துக் கொண்டு அகிலா ராதையை நெருங்கி வந்து உட்கார்ந்தாள். இதற்குள் சிற்றுண்டி முடித்துக்கொண்ட வேறு சில மாணவ மாணவிகள் பரிமாறுவதற்குப் புறப்பட்டுவிட்டனர். ராமனாதனும் பின்தங்கிவிட்ட வேறு சிலரும் சிற்றுண்டி கொள்ளத் தொடங்கினார்கள். ராமநாதன், அகிலாவும் ராதையும் அமர்ந்திருந்த பக்கமாக வந்து உட்கார்ந்துகொள்ள விரும்பினான் - ஆனால் வரவில்லை. சங்கோசி ராதை சரியாக சாப்பிடமாட்டாள் என்று

தான்! அகிலாவுக்கு சற்று ஏமாற்றம் ஏற்பட்டது. ராமனாதன் தன்னுடன் பேசியவாறே சிற்றுண்டி கொள்ள பக்கமாக வந்து அமர்வான் என்று எதிர்பார்த்த அவளுக்கு சிற்றுண்டி சுவைக்கவேயில்லை!

எப்பொழுதும்போல ராதையும் அகிலாவும் சேர்ந்துதான் புறப்பட்டார்கள் - தேநீர் விருந்திற்குப் பிறகு கல்லூரியினின்று ஒரு பர்லாங்கு தூரம் வந்துவிட்டார்கள். ராமனாதன் சைக்கிளிலே வந்தான். சமீபத்திலிருக்கும் பூங்காவிற்கு அவர்களை அழைத்தான். ரேடியோவில் நல்ல நிகழ்ச்சி இருப்பதால் அதைக் கேட்க வரவேண்டும் என்று கூப்பிட்டான்.

ராதை தயங்கினாள் - அகிலா தயாரானாள்.

"உண்ட களைப்பு தீர சற்று பாட்டு கேட்கலாமே! உண்டகளைப்பு ஆண்டிக்குமுண்டு என்பார்கள்!" என்று சொன்னான் ராமனாதன்.

"தொண்டனுக்கும் என்பார்களா? ஆண்டிக்கு என்பார்களா?" என்று ராதை வினவினாள்.

"ஆண்டி என்றுதான் நான் சொல்வது வழக்கம்! ஆண்டிக்கு எத்தனை உணவு கிடைக்கும்? கொஞ்சம் அப்படியும் உண்ட களைப்பு உண்டு என்று அர்த்தம்!" என்று சொல்லி லேசாக ராமனாதன் நகைத்தான்.

'இந்தத் தர்க்கம் எல்லாம் எதற்கு? வயிற்றுக்கு விருந்து ஆச்சு! செவிக்கு விருந்து என்று சொல்லேன்!' என்றாள் அகிலா சற்று பதட்டமுடன்.

ராமனாதன் அகிலாவின் பக்கம் திரும்பினான். "அப்படி வா வழிக்கு! நடந்தது விருந்தா? வயிறு ரொம்பிற்றா?" என்று கேட்டான்.

அகிலா சற்று பெருமிதமடைந்தாள். தான் சரியாக உண்டி கொள்ளவில்லை என்பதை அவன் கவனித்திருக்கிறான் என்று திருப்தியடைந்தாள்.

நடந்தது தேநீர் விருந்துதான் என்று கூற அவளுக்குத்தான் தோன்றவில்லை என்றால் ராதைக்கும் தோன்றவில்லை. 'டீ பார்டி' யின் தமிழ் மொழிபெயர்ப்பு அத்தனை விரைவில் கல்லூரி செல்பவர்களுக்கு நினைவு வந்துவிடுமா என்ன?

அகிலாவின் வற்புறுத்தலினால் ராதை பூங்காவிற்றுச் செல்ல இசைந்தாள். நிகழ்ச்சி முடிய இருபது நிமிஷம்தான் இருந்தது பத்து நிமிஷம் இசையை அனுபவித்தார்கள். பிறகு இளம் பாடகியின் குரல் நயம் பற்றி எழுந்த பேச்சு நிரவல் சஞ்சாரம்போல வளர்ந்துயர்ந்து நிகழ்ச்சியின் முடிவில் முடிந்தது!

ராதை முடுக்கினதன்மேல் அகிலா எழுந்தாள். ராமனாதன் பூங்காவிலே சற்று தங்க விரும்பினான். அதனால் அவன் அவர்களைத் தொடரவில்லை.

சிறிது தூரம் சென்றனர் தோழிகள். பின்னால் வேகமாக வந்தது ஒரு சைக்கிள். இவர்களுக்கு அருகு வரும்பொழுது சற்று மெல்லச் சென்றது.

'ராமனாதன்! இத்தனை சீக்கிரம்!' என்று தோழிகள் வியக்கும்பொழுதே ராமனாதன் ஒரு சிறு கடிதத்துண்டை அவ்விருவரின் முன்பு வீசிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டான்.

ராதை அகிலாவைப் பார்த்தாள். அகிலா ராதையைப் பார்த்தாள்.

என்ன அது? யாருக்கு?

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அகிலா குனிந்தாள்.

"வேண்டாமே! போய்விடலாம் எடுக்காமலே!" என்றாள் ராதை.

"அதுதான் ஆபத்து!' என்று அகிலா சொல்லிக்கொண்டே கடிதத்தைப் பிரித்தாள்.

யார் பெயருக்கு எழுதப்பட்டது அது? பெயரையே காணவில்லை. ராமனாதனின் கையெழுத்துத்தான் அது - ஆனால் கையொப்பம் இல்லை.

கடிதம் காதற்கடிதம் தான்!

'தினமும் வீட்டில் டிபன் சாப்பிட்டுக்கொண்டே ரேடியோ கேட்பதற்கு பதிலாக இன்று டிபனுக்குப்பின் கேட்கலாமே என்று தான் வரச்சொன்னேன்!' என்று கூறி தன்னைப் பூங்காவிலே திகைக்கச் செய்த ராமனாதனை ராதை நினைத்துக்கொண்டாள்.

'அப்படி வா வழிக்கு! விருந்தா அது? வயிறு ரொம்பிற்றா?' என்று தன்னைக் கேட்ட குறும்பு ராமனாதனை அகிலா நினைத்துக்கொண்டாள்!

ஆம் - கடிதம் பொதுவாக எழுதப்பட்டிருந்தது!

'உன்னை மனமார காதலிக்கிறேன் என் உயிராக மதிக்கிறேன் உன்னையே மணக்க விரும்புகிறேன் - என் மனசைக் கவர்ந்துவிட்ட மங்கையே! உன் மனதை அறிய விரும்புகிறேன். நாளை மாலை ஐந்து மணிக்கு - உன் வீட்டண்டை வருகிறேன் - உன் பதிற் கடிதத்தை வீசிப்போடு!'

இதுதான் ராமநாதன் எழுதிய காதற்கடிதம்.

"பார்க்கலாம். யார் வீட்டுப்பக்கம் வருகிறான் என்று பார்த்தால் தெரிந்துவிடுகிறது!'" என்று சொன்னாள் அகிலா.

"பயமாயிருக்குடி எனக்கு,' என்று ராதை சொல்ல விரும்பினாள் - ஆனால் கடிதம் அகிலாவுக்குத்தான் இருக்கும் என்று எண்ணம் எழுந்ததால் அவ்வாறு சொல்லவில்லை. இதற்கு முன்பு அகிலாவிற்கு இதுபோல கடிதங்கள் வந்ததுண்டு என்பது ராதைக்குத் தெரியும். அகிலா இத்தகைய கடிதங்களை சற்றும் பதட்டமின்றி பயமின்றி அலக்ஷ்யம் செய்துவிடுகிறாள் என்பதும் ராதை அறிந்த விஷயம்தான். அகிலாவின் இந்த மனவலிமையும் துணிபும்தான் ராதை வியந்து பாராட்டுவாள்.

ராதை பரபரப்புடன் தன் வீட்டுள் நுழைந்து செல்லும்பொழுது அகிலா "நாளைக்கு லீவு - நினைவிருக்கிறதா ராதை! நன்றாய் கவனி!' என்று கூறி விட்டு போனாள்!

மறுநாள் காலை ராதை வீட்டின் வாசற்புறத்து அறையிலே ஒரு ஒதுக்குப்புறமாக இருந்த ஜன்னலை அடைக்கலம் புகுந்தாள். ராமனாதன் அவளைப் பார்க்க முடியாதவண்ணம் ஆனால் ராமனாதனை அவள் பார்க்கும்படியாக சௌகரியமாக உட்கார்ந்தாள். ராமனாதன் வரமாட்டான் என்றுதான் அவள் எண்ணம். ஒரு பெண் கலகலவென்று ஆடவர்களுடன் பழகிவிட்டால் அவர்கள் 'காதல்' என்று 'கிறுக்கி' ஆரம்பித்துவிடுவார்கள் என்று அகிலாவின் தோழமை ராதைக்கு அறிவுறுத்தியிருந்தது! அகிலாவை நாடித்தான் ராமனாதனும் செல்லக்கூடும்!

'ஐந்தடிக்க இன்னும் பத்து நிமிஷம் இருக்கு!' என நினைத்தவாறே தெருவில் கண்ணோட்டம் போட்டாள் ராதை. ரோடுபோடக் குவித்திருந்த மணற்குவியலில் கொம்புகளிரண்டையும் குத்தி மணலைக்கெல்லி எறிந்து கொண்டிருந்தது ஒரு பசுமாடு. 'போகிற போக்கிலே இந்தக் குறும்பு மாட்டுக்குக்கூட!' என எண்ணி மனதுள் சிரித்தவாறே தலையை ஆட்டியபடி போகும் அந்தப் பசுவையே பார்த்துக்கொண்டிருந்தாள் ராதை.

ஆ! அது யார்! ராமனாதன்! கையில் பிரிக்காத குடையுடன் மெதுவாக அவசரப்படாமல் நடந்து வந்து கொண்டிருந்தான்!

அப்படியானால் அந்தக் கடிதம்.....? இருதயத்துடிப்பு ஒரு வினாடி ஸ்தம்பித்து நின்றது ராதைக்கு. மறுவினாடி பன்மடங்கு துரிதமாகத் துடித்தது! ஆடாமல் அசையாமல் பதுங்கிப் பார்த்தாள். ராமனாதன் அவளுடைய வீட்டினருகு தயங்கித் தயங்கி வந்தான். வீட்டை ஏற

இறங்கப் பார்த்தான். வழியில் போகும் யாரோ சிறு பயலை நிறுத்தி ஏதோ பேச்சுக்கொடுத்தான் பார்வை மட்டும் சுழன்றது. பிறகு பையப்பைய நடந்து ராதையின் வீட்டை கடந்து போய்விட்டான்.

அவன் சென்றபின் ராதையின் பதட்டமனைத்தும் பரிவாகக் கனிந்தது.

'நல்லவன், அழகன் - ராமனாதன். சம்மதம் என்று சொல்லியிருக்கலாமோ? பெரியவர்கள் மூலம் மணம் பேச முயன்றிருப்பானோ, பதிலளித்திருந்தால்? இஷ்டமில்லை, அவனை மணக்க விருப்பமில்லை என்றுதான் நீ சொல்கிறாயா மனமே? அல்லவே?'

இந்த எண்ணமும் வேதனையும் சிறிது நேரம் ராதையைத் துன்புறுத்தின. ஆனால் பிறகு அவளே கூசினாள். 'அகிலாவையே நல்லவளாக்கிவிடுவேன் போலிருக்கு! சை - ஏன் விவேகமற்ற யோசனை வந்தது!' என நொந்தாள்.

அகிலாவிடம் என்ன சொல்வது? 'வந்தான் தடியன் என் வீட்டுப்பக்கம்,' என்று தெரிவிப்பதா?

ராதையைப் பொறுத்தமட்டில் காதற்கடிதம் அவளுக்கு எழுதப்பட்டது என்பதை நினைக்கவே மனம் கூசி வெருவியது. தன்னுடைய பெயருக்கும் பண்புக்கும் அது இழிவாகப்பட்டது. அகிலாவைப் போல அலக்ஷியமாக பாவிக்கவோ சகஜமாக ஏற்கவோ ராதையால் இயலவில்லை.

மறுநாள் அகிலாதான் முதன் முதலில் கேட்டாள். "இல்லை வரவில்லை," என கூசாமல் பதிலளித்தத ராதை அகிலாவைக் கேட்டாள். "உம் வந்தான்!" என்று சுருக்கமாக சிறிதும் கலக்கமின்றி பதிலளித்துவிட்டு அகிலா அந்த விஷயத்தை மறந்தவளாகவே விளங்கினாள்! ராதைக்கு மட்டும் நெஞ்சு விம்மியது. நாலே முக்காலுக்குத் தன் வீட்டு வழி சென்ற ராமனாதன் ஐந்து மணிக்கு அங்கே சென்றிருப்பான் என்று தோன்றிய அந்த ஒரு வினாடி மிகவும் கசந்தது.

தோழிகள் இருவரும் அடுத்த இரண்டு நாட்களும் 'ராமனாதனைக் காணோம்' என்று கலாசாலையில் கவனித்தனர். ஆனால் அதைப்பற்றி அவர்கள் பேசிக்கொள்ளவில்லை.

மூன்றாம் நாள் ராதையின் வீட்டு விலாசத்திற்கு ஒரு 'ரிஜிஸ்தர்' கடிதம் ராமனாதனிடமிருந்து வந்துவிட்டது! பெற்றோரின் பக்கலிலேயே ராதை பிரிக்கும்படியாயிற்று.

'தோழிகள் நீங்கள் இருவரும் ஒரு நாளும் இணைபிரியாமலிக்கிறீர்களே! எனக்கு ரொம்ப சங்கடமாகிறது! இரண்டு நாட்களுக்கு முன்பு உங்கள் இருவரின் முன்பு வீசிப்போட்டேனே ஒரு கடிதம்? அது என்னவாயிற்று, அதன்பலன் என்ன, அதற்கு விடையாது என்பதேதும் அறியாமல் இருளிலே அவதியுறுகிறேன் நான்!'

இதுதான் கடிதம். பெற்றோர்கள் படித்தார்கள் 'பெண்ணைக் காலேஜிலே சேர்த்த பொழுதே இது போன்ற சம்பவங்களுக்கு நாம் தயார் அன்றோ?' என மனைவிக்கு ஆறுதலளிப்பவர்போல நினைப்பூட்டிவிட்டு சீதாபதி மகளை விளித்தார். விவரம் கேட்டார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு வந்த பொது கடிதம் பற்றியும் அகிலாவின் வீட்டின் வழி அவன் சென்றதாக அகிலா கூறியதாகவும் தெரிவித்த ராதை, "இந்த வழியும் அவன் சென்றான்," என்று மட்டும் கூறவில்லை!

"அவளையே கேட்டிருக்கலாமே அவன்? உனக்கு எதற்கு இந்த ரிஜிஸ்தர் கடிதம்?"' என்று யோசிப்பவர் போல துவங்கி குறுக்கு விசாரணையில் இறங்கிவிட்டார் சீதாபதி.

"அகிலா பதில் போடமாட்டாள் அப்பா - அவளுக்கு இந்த மாதிரிக் கடிதங்கள் வருவது வழக்கம்தான்," என்று முறுவலித்த ராதை திடீரென்று கண்களிலே வியப்பு சுழல "அவள்

எழுதமாட்டாள் பதில், அதனால் என்னை விவரம் கேட்டிருப்பானோ என்னமோ? இல்லாவிட்டால் அவளையே நேரில் கேட்கணுமென்றுதான் என்னை விலகச் சொல்கிறானோ என்னமோ?'" என்று தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தாள்.

"நீ விவரம் எழுதுவாய், பதில் எழுதுவாய் என்று அவன் எதிர்பார்க்கிறானா? நீ எழுதுவது மட்டும் அழகா?'" என சிரிக்காமலே குறும்பாகக் கேட்டார் சீதாபதி.

"நானும் எழுதத்தான் மாட்டேன்!"

"உதவி என்று ஏற்பட்டால் எழுதினாலும் தப்பில்லையே அம்மா! எழுது, அட்ரஸ் தெரியுமா?"

"போப்பா!"

இந்தச் சமயத்தில் ராதையின் தாயாரும் "போதுமே, என்ன வெட்டிப் பேச்சு! பிடிக்கவேயில்லை!" என முணுமுணுத்தாள். ஆனால் சீதாபதி கையிலிருந்த கடிதத்தையே திருப்பித் திருப்பி பார்த்தார்.

"நீ எழுதுகிறதானால் புத்தகத்தில் மறைத்தோ எதிரில் வீசிப்போட்டோ நேரிலேயே பேசியோ அகிலாவையும் கலந்தாலோசித்து செய்யலாம் - உனக்கும் ஒரு கலியாணத்தை முடித்து வைக்கும் புண்ணியம் கிட்டும்."

கணவரின் சிரிப்பு மனைவிக்குக் கடுத்தது. "ஆமாம் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி முடித்து கன்யாதான புண்ணியம் உங்களுக்கு வந்துவிட்டது!" என மொண மொணத்தாள் சீதாபதியின் மனையாள். ராதை மௌனியாய் உற்சாகமிழந்து தென்பட்டாள்.

"போகிறது - உன் உதவியை அவன் நாடுகிறான் - நானே உன் வேலையைச் செய்கிறேன். அந்தப் புண்ணியம் எனக்கே வரட்டும். பையனை நான் 'கான்டேக்ட்' பண்ணுகிறேன் - அகிலாவுக்குப் பொருத்தம் என்றால் அவளுடைய அப்பாவுக்குச் சொல்லுகிறேன். அகிலா என் பெண்ணானால் என்ன, என் 'கலீக்'கின் பெண்ணானால் என்ன? உன் சிநேகிதி - சரி ரைட்டோ!" என்று உற்சாகமுடன் பேசிய அவர் சட்டென்று, "பையன் அட்ரஸ் என்னவோ? உனக்குத் தெரியுமா ராதே? யார் பையன்? வீடு எங்கே?" என்றார்.

தந்தையை ஏறிட்டு உற்றுப் பார்த்தாள் ராதை. சற்று நலிந்த தொனியிலே, "கன்ட்ராக்டர் ஜம்புகேசுவரன் இருக்காரேப்பா . . . நம்ம எக்ஸ்டென்ஷனிலேயே . . . " என்றாள்.

"அவர் பையனா இந்த ராமனாதன்?" அதற்கு மேலே அவர் பேசவில்லை. ஆனால் அவருடைய முகக்குறிப்பு ஏன் அத்தனை திகைப்பை காட்ட வேண்டுமோ?

நண்பரின் மகள் அகிலாவிற்கு ராமநாதனை மணமுடிக்கத் தன்னாலியன்ற உதவி செய்ய சீதாபதி விரும்பினார். அகிலாவிற்கும் ராமனாதனை மணக்க ஆசைதான் என்பதை மட்டும் அகிலா மூலமோ அவள் தந்தை மூலமோ அறிய வேண்டும். "சிறுபிள்ளைத்தனமாக நீ எழுதவில்லையேப்பா காதற் கடிதம்? அகிலாவை மணக்க உண்மையாக விரும்புகிறாயா?" என்று ராமனாதனை முதலில் கேட்டுவிட்டுத்தான் பிறகு எந்த வேலையும் துவங்க வேண்டும்!

ராமநாதனுக்கு சீதாபதியின் கடிதம் போய்ச் சேர்ந்ததும் அவன் சீதாபதியைத் தேடிக்கொண்டு வந்துவிட்டான் வாசற்படியேறி உள் நுழைந்து அவன் அவருடன் உரையாடத் தொடங்கிய வேளை சுபவேளை!

அடுத்த மாதம் அவன் அவருடன் உறவாடத் தொடங்கிவிட்டான் ராதையின் கணவனாக!

சீதாபதியின் அருமைப் புதல்வியை அவன் திட்டவும் திட்டினான்! "உன் மூளையே மூளை! உன்னைத்தான் நான் எப்பொழுதும் தனியாய்ப் பார்க்க முடியவில்லை - அகிலாவுக்கு எழுதணுமென்றால் அவள் உன் வீட்டிற்கு காலையில் வந்து சேரும் முன்போ

அல்லது உன்னை விட்டுவிட்டு அவள் மாலையில் செல்லும் பொழுதோ எனக்கு வசதியில்லையா? நீதானே பழியாய் அவளுடனேயே வீட்டில் புகுவாய்? அதனால்தான் இருவருமாக இருக்கும் பொழுதே எழுதினேன்!" என்று சொன்னான்.

"அவள் சொன்னாளே - நீங்கள் அவள் வீட்டுப் பக்கம் வந்ததாக!" என்று ராதை அவனைக் குற்றம் சாட்டினாள் - ஒரு தடவை அல்ல பன்முறை!

"சமர்த்துத்தான் போ நீ! அவள் பொய்சொல்லியிருக்கிறாள்! - நீ பொய் சொன்னது போலத்தான்! நான் வரவில்லை என்று நீ சொல்லியிருந்தாய், பொய்தானே? நான் வந்தேன் என்று நீ சொல்லியிருந்தால் அவள் வாயை மூடிக்கொண்டிருந்திருப்பாள் - நீ தான் அவளை இன்னும் நம்பிக்கொண்டு என் வார்த்தையை நம்ப மறுக்கிறாய்! இனியும் பேசாதே! நமக்குத் தெரியாமலே உன் அப்பா நம் ஜாதகப் பொருத்தத்தை முதலிலே பார்த்து வைத்திருந்தாராம்! எப்படியும் நமக்குத்தான் நடந்திருக்கும் கல்யாணம்!" என்று வாயடி கையடி அடித்து ராதையை உரிமையுடன் அடக்குகிறான்.

அகிலாவின் 'பொய்' அகிலாவின் வாய்மொழியாகவே ஜாடை மாடையாக பிறகு வெளிப்பட்டதை ராதை உணர்ந்து கொள்ளவில்லை - ஆனால் அவளுக்குக் கணவனின் சொல்லிலும் அன்பிலும் இருக்கும் அன்பு செறிந்த உறுதியே போதும்! காதற்கடிதம் எழுதத் துணிந்த காளை கணவனாகவே வாய்த்துவிட்டதனால் அவனுக்கு மாசு இருக்கிறதோ இல்லையோ தனக்கு மாசும் இழுக்கும் ஏற்படவில்லை என்று அவளுக்குப் பெருமிதப் பேருவகை உள்ளத்திலே நிலவுகிறது.

**********

(வெள்ளிமணி சிறுகதை, ஜானுவரி 1, 1952)